உ

கடவுள்துணை.

# ஆண்பிள்ளை வீண்பிள்ளைச்சிந்து.

இஃது,

களத்தூர், வேதகிரிமுதலியார்-குமாரராகிய

ஆயுள்வேதபாஸ்கரர்

கந்தசாமிமுதலியாரால்

பார்வையிடப்பட்டு,

பெங்களூர்—ஆ, தொப்பைமுதலியார்

மருமகப்பிள்ளை

ஆ—வே—ஆறுமுகமுதலியார்

பொருளுதவியினால்.

சீ—வே—சொக்கலிங்கமுதலியாரவர்களது

ஜீவரக்ஷாமிர்தசாலை அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

௲௮௱௭௮ (வரு) ஜூலைமீ ௰௪௨

இதன்விலை அணா ௧

உ

கடவுள் துணை.

# ஆண்பிள்ளை வீண்பிள்ளைச்சிந்து.

## காப்பு - வெண்பா.

சீராருலகினர்தந் தீயநெறிமாற்றிப்
பேரார்நன்னெறிவிளங்கப்பேசுதற்கிங்-கோரும்
மும்மலமும்முச்சுடரும் முப்பாழுக்கப்பாலாஞ்
செம்மலிணைத்தாளிணையே சேர்

## கண்ணிகள்.

சீர்மலியகிலசராசரமாயொளிர்
சிவமதைச்சேர்ந்தவ னாண்பிள்ளை
உயர்-தவமதிற்சார்ந்தவ னாண்பிள்ளை
பார்வருவுடலமாய்மனமதுகொண்டு
பவத்தினிலுழன்றவன் வீண்பிள்ளை
சத்துச்சித்தானந்தமாகியபரவெளி
தன்னையறிந்தவ னாண்பிள்ளை
மெய்யிற்-றன்னைத்தெரிந்தவ னாண்பிள்ளை

Digitized by Roja Muthiah Research Library

முத்திமுதல்வனைப்பணியாமல்நாடோறும்
மூடமாய்த்திரிந்தவன் பெண்பிள்ளை
தன்னிலிலங்கும்பொருளின்னதென்றேயறியச்
சாதனைபுரிந்தவ னாண்பிள்ளை
சக-நாதனைத்தெரிந்தவ னாண்பிள்ளை
மின்னனையபுவியின் மாய்கையிற்சிக்கியே
மிகமெலிவுற்றவன் பெண்பிள்ளை
ஆறுதாரமுங்கடந்ததுரியமதில்
அன்புவைத்தவனேநல் லாண்பிள்ளை
பூவின்-இன்மையற்றவனேநல் லாண்பிள்ளை
தாரார்குழன்மடமங்கையர்மோகத்தில்
சார்ந்துதிரிபவனே பெண்பிள்ளை
மும்மலமுங்கடந்தமூர்த்தியினருள்பெற
மூண்டுதிரிந்தவ னாண்பிள்ளை
மனங்-கனிந்துபரிந்தவ னாண்பிள்ளை
இம்மகிதலவாழ்வைச் சதமெனவெண்ணியே
யெங்கியலைந்தவன் பெண்பிள்ளை
நாலிரண்டுக்குமெட்டாநாதன்றிருவடியை
நாடத்துணிந்தவ னாண்பிள்ளை
வினை-வாடப்பணிந்தவ னாண்பிள்ளை
பாலினுமின்சொலாம்பாவையர்க்காளாகிப்
பரிவுகொண்டலைந்தவன் பெண்பிள்ளை

Digitized by Roja Muthiah Research Library

பொறிபுலன்பூதமாம்பொருளைமனவெளியில்
பொருந்தித்துதித்தவ ஆண்பிள்ளை
மனந்-திருந்திமதித்தவ ஆண்பிள்ளை
அறிவிலனாயுலகிற்பாசமெனுங்கடலி
லாழ்ந்து திரிபவனே வீண்பிள்ளை
உலகனைத்தும்படைத்தோ னொருவனென்றேம
றைகளோதமகிழ்ந்தவ ஆண்பிள்ளை
பத-மீது புகழ்ந்தவ ஆண்பிள்ளை
கலகவிழியார்காமத் தீயினிலகப்பட்டு
காய்ந்துடல்மாய்ந்தவன் வீண்பிள்ளை
சர்வலோகசரண்யா சயம்புவேயென்றுநிதஞ்
சாற்றவு வந்தவனே ஆண்பிள்ளை
புகழ்-போற்றப்புகுந்தவனே ஆண்பிள்ளை
கெர்வித்தடியார்களைப்பங்கமதாயுரைத்த
கெடுமதியுடையவன் வீண்பிள்ளை
ஆதிமூலமேயென்று ஓதுங்கஜேந்திரனுக்
கருளியதையறிந்தோ ஆண்பிள்ளை
மனத்-திருளறவேபரிந்தோ ஆண்பிள்ளை
பாதகனாய்ப்புவியில் வீணர்கடமைக்கூடி
பத்தர்களைப்பழித்தோன் வீண்பிள்ளை
நந்தாமுகுந்தா ஹரி நாராயணாவென்று
நாடித்திரிந்தவ ஆண்பிள்ளை

Digitized by Roja Muthiah Research Library

நாமம்-பாடித்திரிந்தவ னாண்பிள்ளை
எந்தவேளையும்மிகு சுந்தர மாதரின்
இன்பமேகதியென்போன் வீண்பிள்ளை
என்னைக்கைசோரவிடி லெப்படிநாதனே
என்றுபாதவிப்போ னாண்பிள்ளை
மனங்-குன்றிமிகத்தவிப்போ னாண்பிள்ளை
நன்னெறியில்லாமூடரைக்கூடி
நலிந்துதிரிபவனே வீண்பிள்ளை
அச்சுதாகேசவா அனந்தசயனாவென்று
ஆடித்திரிபவ னாண்பிள்ளை
மிக-வாடிக்களிந்தவ னாண்பிள்ளை
உச்சிதப்பெண்களின் கள்வலையினிற்சிக்கி
உண்மைகெட்டலைந்தவன் வீண்பிள்ளை
ஆதியனாதி சோதியாய்நின்றிலங்கும்
ஐயனையறிந்தவ னாண்பிள்ளை
ஒளிர்-மெய்யனையறிந்தவ னாண்பிள்ளை
ஓதியுமுணராமல்மாதரைக்கூடி
யுலகத்திலலைந்தவன் வீண்பிள்ளை
பஞ்சரக்கூட்டினி லிருந்துநடனமிடும்
பரமனையறிந்தவ னாண்பிள்ளை
தன்-திறமையால்தெரிந்தவ னாண்பிள்ளை
வஞ்சனைசெய்மடமாதர்கள் மயக்கத்தில்
வாடிவிழிப்பவனே வீண்பிள்ளை

ROJA MUTHIAH
KOTTAIYUR-623 108

Digitized by Roja Muthiah Research Library

தன்னுயிர்போலமன் னுயிர்களையுநினைத்து
தரணியில்காத்தவ னாண்பிள்ளை
மிகு-கருணையால்பார்த்தவ னாண்பிள்ளை
நன்னெறியில்நடவா நங்கையர்களைக்கூடி
நாணிப்பரதவிப்போன் வீண்பிள்ளை
சந்த்ரசடாதர சங்கரனேயென்று
சாற்றித்திரிந்தவ னாண்பிள்ளை
நிதம்-போற்றித்திரிந்தவ னாண்பிள்ளை
சுந்தரஞ்சேர்மட மாதர்கள் மையலால்
சோர்வுற்றலைந்தவன் வீண்பிள்ளை
பன்னவரோத்தும் பொன்னம்பலவன் பதம்
பாடித்திரிபவ னாண்பிள்ளை
கூத்-தாடித்திரிபவ னாண்பிள்ளை
எண்ணறியாப்பிறவிக் கடலிற்கரைகாணாமல்
ஏக்கமுற்றிருந்தவன் வீண்பிள்ளை
மெய்யடியார்களைக்கண்டேயவர்பணி
மேவிநடப்பவ னாண்பிள்ளை
மலர்-தூவியடுப்பவ னாண்பிள்ளை
வையகமீதினில்வீணரைக்கூடி
மதிகெட்டலைபவன் வீண்பிள்ளை
நாசிமுனையில்நடுவணையாய்நின்ற
நாதனைக்கண்டவ னாண்பிள்ளை
ஒளிர்-போதனைக்கண்டவ னாண்பிள்ளை

Digitized by Roja Muthiah Research Library

வாசியடக்கும்வகை யறியாமலேவுன்
மத்தனாய்த்திரிந்தவன் வீண்பிள்ளை
நான்மறையோது நல்லாகமவேள்விகள்
நலமுறச்செய்தவ னாண்பிள்ளை
முத்தி-தலமுறவுய்தவ னாண்பிள்ளை
தேன்கமழ் பூங்குழல் தெரிவையர்களை நாடி
சித்தம் பிரமித்தவன் வீண்பிள்ளை
சத்திரஞ்சாவடி சாலைகள் சோலைகள்
தானமமைத்திட்டவ னாண்பிள்ளை
கொடுங்-கான் திரிந்திட்டவ னாண்பிள்ளை
சித்ரவிலைமாதர்கள் மெச்சிடமேடைகள்
செம்பொன்னளித்தவன் வீண்பிள்ளை
தேவாலயங்களுந்திகழ்மடங்களுங் கட்டி
தேசங்கள் திரிந்தவ னாண்பிள்ளை
நல்லோர்-வாசங்கள் புரிந்தவ னாண்பிள்ளை
பாவாணர்களுக்கும்பத்தர்க்குமாசை சொல்லிப்
பலகால்திரியச்செய்தோன் வீண்பிள்ளை
அண்டினபேர்களை ஆதரித்தன்னமிட்டு
ஆடைகளளித்தவ னாண்பிள்ளை
உயர்-மேடையிற்களித்தவ னாண்பிள்ளை
குண்டுணியாய்த்திரிந்து ஓரமுனைத்துப்பிறர்
குடும்பத்தைக்கலைத்தவன் வீண்பிள்ளை

Digitized by Roja Muthiah Research Library

தனக்கிடர்வந்தபோது மொருவரிடர் தவிர்த்துச்
சலியாமலிருப்பவ னாண்பிள்ளை
இஞ்சற்றும்-மெலியாம லிருப்பவ னாண்பிள்ளை
கனத்தவனென்றேசொல்லி சமையத்திற்கையைவிட்
டு, கடக்கநிற்கின்றவனே வீண்பிள்ளை,

நல்லவனென்றெவரும்நாட்டவவர்பணியில்
நன்மைசெய்திட்டவ னாண்பிள்ளை
கொடும்-வன்மையைவிட்டவ னாண்பிள்ளை
வல்லவர்பாற்சேர்ந்து ஏழையெளியோர்களை
வஞ்சனைபுரிந்தவன் வீண்பிள்ளை

சொல்லுந்தருமங்களிற் றன்னாலின் றவ்வாயில்
சுகமுறச்செய்தவ னாண்பிள்ளை
நல்ல-அகம்வாய்ந்தவ னாண்பிள்ளை
கல்லுமுருகப்பாடும் அடியார்களுக்குதவாக்
கசடனெவனோ வவன் வீண்பிள்ளை

ஆருயிர்நாதனோ டரியயனமரர்க
ளரும்பதம்வாழ்த்துவோ னாண்பிள்ளை
விண்ணோர்-பெரும்புகழேத்துவோ னாண்பிள்ளை
பார்தனிற்பெரியோரைப் பரியாசஞ்செய்து நிதம்
பாதகித்தலைபவன் வீண்பிள்ளை

ஆண்பிள்ளை வீண்பிள்ளைச்சிந்து
முற்றுப்பெற்றது.

Digitized by Roja Muthiah Research Library